இன்றைய செய்தி நாளைய வரலாறு




முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 26-12-2024

# தோழர் நல்லகண்ணு நலமோடு வாழ்க!



**ஏழைகளின் இதயம் நீ!**
**இருள்காலை உதயம்நீ!**
**தோழர்களின் துணைவன் நீ!**
**தொண்டறத்தின் சிகரம் நீ!**
**எளியோரின் இலக்கியம்நீ!**
**எளிமைக்கும் இலக்கணம்நீ!**
**தூய்மையின் இருப்பிடம் நீ!**
**தோற்காத இலட்சியம்நீ!**
**தனிவுடைமை சிதைப்பவன்நீ!**
**தலைநிமிர்ந்த இமயம்நீ!**

– என்று எழுதினார் பாவலர் பல்லவன். பொதுநலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பொதுவுக்காய் வாழும் பொதுவுடைமைத் தலைவர் தோழர் நல்லகண்ணு நூற்றாண்டு விழா காண்கிறார் இன்று. (டிசம்பர் 26)

இந்தியாவின் ஆட்சியைக் கவிழ்த்து கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை நிறுவ முயற்சிப்பதாக 1948 காலக்கட்டத்தில் பல்வேறு ஊர்களில் கம்யூனிஸ்ட் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள். பலரும் தலைமறைவு ஆனார்கள். பலரும் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட தோழர்களில் ஒருவர் நல்லகண்ணு.

இரண்டு ஆண்டு காலம் தலைமறைவில் இருந்த தோழர் நல்லகண்ணு 1949 டிசம்பர் 20 அன்று கைது செய்யப்பட்டார். எந்தப் பண்ணையார்களை எதிர்த்து நீதி கேட்டாரோ அந்தப் பண்ணையார்கள் முன்பாகவே அடித்து சித்திரவதை செய்யப்பட்டார். கையும் காலும் கட்டப்பட்டு முச்சந்தியில் போட்டு அடித்தார்கள். அவரது மீசையை சிகரெட் நெருப்பால் சுட்டார்கள். மலை உச்சிக்கு தூக்கிச் சென்று, ‘இதில் இருந்து தான் பலரையும் தூக்கிப் போட்டேன், இப்போது உன்னையும் போடப் போகிறேன்’ என்றார் போலீஸ்காரர். அப்போதும் வாயைத் திறக்காமல் நெஞ்சுரத்தோடு இருந்தவர்தான் நல்லகண்ணு.

**“கம்யூனிஸ்ட்டுகளான எங்களைப் போன்றோர், விடுதலை இந்தியாவில் வறுமை ஒழிக்கப்பட வேண்டுமென்று விரும்பினோம். அந்நிய அதிகாரிகளுக்கு அடுத்தபடியாக மக்களை அடக்கி வந்த ஜமீன்தார்கள், மிராசுதார்களிடமிருந்து கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டுமென்று கருதினோம். ஜமீன் தார்களையும் மிராசுதார்களையும் மடாதிபதிகளையும் எதிர்த்து உழவர்களை ஒன்று திரட்டினோம். அணு அணுவாய்ப் போராடி உரிமைகளைப் பெற்றோம் என்பதை விட உரிமைகளைப் பறித்தோம்” என்று சொன்னார் நல்லகண்ணு.**

ஏழு ஆண்டுகள் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்து வெளியில் வந்த பிறகும், முன்னிலும் உரம் பெற்று உழைத்தார். சுதந்திர இந்தியாவில் பொதுவுடைமைத் தத்துவம் தமிழ்நாட்டில் வளர உழைத்ததில் தோழர் நல்லகண்ணுவின் பங்கு பெரும்பங்கு ஆகும். வரலாற்றில் தனிமனிதர்களின் பங்கை ஒப்புக் கொண்ட தத்துவம்தான் மார்க்சியம். அதன்படி வரலாற்றில் பெரும்பங்கு தோழருக்கும் உண்டு.

இந்தியாவின் புகழ்பெற்ற பத்திரிக்கையாளர் சாய்நாத், தோழர் நல்லகண்ணுவிடம் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கேள்வியைக் கேட்டார். “உங்கள் வாழ்க்கையில் சோர்வே ஏற்படவில்லையா?” என்று!

“நாங்கள் எச்சரிக்கைகள், மிரட்டல்கள் தாண்டி எழுந்து நின்றோம். அதனால்தான் நாங்கள் இன்றும் இங்கிருக்கிறோம்” என்றார் நல்லகண்ணு.

இப்போது தோழர் நல்லகண்ணு, பொதுவுடைமைத் தத்துவத்தின் அடையாளமாக நம் முன் காட்சியளிக்கிறார். பொதுவுடமை என்பது எது என்பதன் அடையாளமும் அவர் தான். மார்க்ஸ் – அம்பேத்கர் – பெரியார் ஆகிய மூன்றின் கூட்டுத் தத்துவமாக தமிழ்நாட்டில் பொதுவுடைமைச் சிந்தையை வளர்த்த – வார்ப்பித்த ஆளுமைகளில் ஒருவர்தான் தோழர் நல்லகண்ணு. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் நீட்சியாக, மாவீரர் ஜீவாவின் தொடர்ச்சியாக இருப்பவர் தோழர் நல்லகண்ணு.

அன்றைய காலனியாதிக்க காலம் முதல் – இன்றைய மதவாத எதேச்சதிகார காலம் வரை எதை – எப்போது மிகச் சரியாக எதிர்கொள்ள வேண்டும் என்பதைக் கணித்து அதை, அப்போதே எதிர்த்து அரசியல் களம் அமைப்பதில் நேரிய சிந்தனை கொண்ட நேர்மையாளராக வலம் வந்தவர் அய்யா நல்லகண்ணு அவர்கள்.

பொதுவுடமை – சமூகநீதி – சாதி ஒழிப்பு – மதவாத எதிர்ப்பு – தேசிய இனப்பிரச்சினை – தமிழுக்குச் சிறப்பு – தமிழின மேம்பாடு – ஆகிய அனைத்துக்கும் சரிசமமான முக்கியத்துவம் கொடுத்து உழைத்தவர் தோழர் நல்லகண்ணு. உழைக்க வழிகாட்டியவரும் அவரே!

“சுதந்திரமும் சோசலிசமும் பிரிக்க முடியாதவை. சுதந்திரத்திலிருந்து சோசலிசத்தையோ, சோசலிசத்திலிருந்து சுதந்திரத்தையோ பிரித்தால் எஞ்சுவது சூனியம்தான். வெற்றி என்பது ஓர் இயக்கத்துக்கு, இலட்சியத்துக்கு, கட்சிக்கு இறுதி நிகழ்ச்சியல்ல. முந்திய தலைமுறை விட்ட இடத்திலிருந்து புதிய தலைமுறை தொடர்ந்து இயங்க வேண்டும். வேலைத் திட்டம் என்பது பசி. வெற்றி என்பது அதற்குக் கிடைக்கும் உணவு. உணவு கிடைத்துவிட்டது என்பதால் பசி நின்று விடாது. பசியும் உணவும் தொடர வேண்டும்” என்றவர் தோழர் நல்லகண்ணு.

**வாழ்க்கையில் இறுதி வெற்றி என்று எதுவுமில்லை. வாழ்க்கை முழுக்கவே போராடிக் கொண்டே இருக்க வேண்டும் என்று கற்பித்த தோழர் நல்லகண்ணு, 100 ஆண்டுகள் கடந்த பின்னும் போராடிக் கொண்டே இருக்கிறார். போராட்டம்தான் வாழ்க்கை என்பதை உணர்த்திக் கொண்டே இருக்கும் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ‘தகை சால் தமிழர்’ விருது வழங்கிப் பாராட்டி இருக்கிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**தலைதாளாத ‘தகை சால் தமிழர்’ தோழர் நல்லகண்ணு வாழ்க!**

••

## மதுரையில் – ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு

# இந்துஸ்தான் ‘ஜிங்க்’ நிறுவனத்துக்கு டங்ஸ்டன் சுரங்கம் தோண்டும் அனுமதியை ரத்து செய்க!

## ஒன்றிய அரசுக்கு – அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

**சென்னை, டிச.25-**

**ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனம் டங்ஸ்டன் சுரங்கம் தோண்டுவதற்கான அனுமதியை ஒன்றிய அரசு ரத்து செய்ய வேண்டும் என்றும், இது தொடர்பாக ஒன்றிய அமைச்சகமும், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியும் வெளியிட்ட அறிக்கைகளுக்குப் பதிலளித்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**



டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் குறித்த எடப்பாடி பழனிசாமியின் குற்றச் சாட்டை மறுத்துள்ள நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு அரசு சார்பில் கடந்த ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியதாக தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், டங்ஸ்டன் சுரங்க ஏலத்தில் பல அடிப்படையான குறைபாடுகள் உள்ளதை தெளிவாக சுட்டிக்காட்டியும், மாநில அரசு மட்டுமே கையாள வேண்டிய சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்பதை விளக்கியும் ஒன்றிய சுரங்கத்துறை அமைச்சருக்கு கடந்த ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி கடிதம் எழுதியதாகத் தெரிவித்துள்ளார். ஒன்றிய புவியியல் மற்றும் சுரங்க ஆணையர், மாநில சுரங்க அமைச்சகத்திற்கு அனுப்பிய கடிதத்தில், அரிட்டாப்பட்டியின் உயிரியல் பன்முகத்தன்மை பாரம்பரிய தளத்தை உள்ளடக்கியது என்பதைத் தவிர, வேறு எந்த நில விவரங்களும் குறிப்பிடப்படவில்லை என்றும், இருப்பினும், கனிமத் தொகுதியில் ஒரு பல்லுயிர் பாரம்பரிய தளம் இருப்பதை முழுமையாக அறிந்த ஒன்றிய சுரங்க அமைச்சகம் ஏல நடவடிக்கையை தொடர்ந்ததாகவும் அமைச்சர் துரைமுருகன் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது, ஒன்றிய சுரங்க அமைச்சகம் ஏலம் மட்டுமே விட முடியும் என்றும், சுரங்கத்திற்கான குத்தகையை மாநில அரசுதான் வழங்க வேண்டும் என்பதை ஒன்றிய சுரங்க அமைச்சகம் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

இந்த சுரங்க ஏலத்தால் ஏற்படும் சட்டம்ஒழுங்கு பிரச்சினைகளை மாநில அரசு மட்டுமே எதிர்கொள்ள வேண்டிய நிலையில், இதற்கான வருவாய் மாநில அரசுக்கு மட்டுமே சேரும் என்ற போது, மாநில அரசின் எதிர்ப்பை மீறி ஒன்றிய அரசு ஏன் ஏலத்தை மேற்கொண்டது என்று அமைச்சர் துரைமுருகன் கேள்வி எழுப்பி உள்ளார்.

இவ்விவகாரம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியதைத் தொடர்ந்து சுரங்க ஏலத்தை மறுஆய்வு செய்ய ஒன்றிய சுரங்க அமைச்சகம் முடிவு செய்துள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு சுரங்க ஒப்பந்தம் வழங்கியதை ஒன்றிய அரசு ரத்து செய்ய வேண்டும் என்று அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

## மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின்

# சரஸ்மேளா - மாபெரும் விற்பனைக் கண்காட்சி!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச. 26 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள், மதி அனுபவ அங்காடி, மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி அங்காடி, மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம், இயற்கைச் சந்தைகள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் என பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதன் வாயிலாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறையானது கிராமப்புற கைவினைக் கலைஞர்கள் தங்களின் தயாரிப்புப் பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏதுவாக பல்வேறு மாநில அரசுகளுடன் இணைந்து ‘சரஸ்’ (SARAS) எனப்படும் விற்பனை கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை (27.12.2024) மாலை 4.00 மணியளவில் சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் சரஸ் மேளா மற்றும் மாநில அளவிலான மாபெரும் விற்பனைக் கண்காட்சியினை துவக்கி வைக்க உள்ளார்.

இந்தக் கண்காட்சியில், ஆந்திரா மாநிலத்தின் அழகிய மரச் சிற்பங்கள், கொண்டப்பள்ளி பொம்மைகள், குஜராத் மாநிலத்தின் கைத்தறி ஆடைகள், பீகார் மாநிலத்தின் மதுபாணி ஓவியங்கள், கேரள மாநிலத்தின் பாரம்பரிய உணவு வகைகள் மகாராஷ்ட்ரா மாநில கோண்ட் பழங்குடியினரின் வண்ண ஓவியங்கள் உள்ளிட்ட கலைநயம் மிகுந்த கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட வுள்ளன.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், நாச்சியார்கோவில் குத்து விளக்குகள், கடலூர் முந்திரிப் பருப்பு, தருமபுரி சிறுதானிய தின்பண்டங்கள், ஈரோடு தரை விரிப்புகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கன்னியாகுமரி வாழைநார் பொருட்கள், நாமக்கல் கொல்லி மலை அரபுளி காபித்தூள், கரூர் கைத்தறி துண்டுகள், சிவகங்கை பாரம்பரிய அரிசி வகைகள், திருவண்ணாமலை ஜவ்வாது மலை தேன், சிறுதானியங்கள், தூத்துக்குடி பனை பொருட்கள், பனை வெல்லம் (கருப்பட்டி), விழுப்புரம் சுடுமண் சிற்பங்கள், கோரைப் பொருட்கள், அலங்கார விளக்கு திரைகள், விருதுநகர் செட்டிநாடு புடவைகள், அரியலூர் முந்திரி பருப்பு, கோயமுத்தூர் மூலிகை சோப்புகள், திண்டுக்கல் சின்னாளப்பட்டி சேலைகள், திருச்சி செயற்கை ஆபரணங்கள், தேனி சானிடரி நாப்கின் மற்றும் திரு நெல்வேலி அல்வா போன்ற பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

2024 டிசம்பர் 27ஆம் தேதி முதல் 2025 ஜனவரி 09ஆம் தேதி வரை நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெறும் சரஸ் மேளாவில் உணவு அரங்குகள், பல்வேறு கலை நிகழ்ச்சிகள், இலவசமாக வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற அம்சங்கள் நிறைந்துள்ளன. இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

இத்தகைய சிறப்புமிக்க சரஸ் மேளா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மாநில அளவிலான மாபெரும் விற்பனை கண்காட்சிக்கு பொதுமக்கள் அனைவரும் வருகை தந்து, பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த தரமான பொருட்களை வாங்கி பயனடைவதோடு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.




சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி, 134 (அ) வட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம், தியாகராயர் நகர் தொகுதி பார்வையாளர்எஸ்.பத்மபிரியா, மகளிர் தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி, வட்ட செயலாளர்கள் ஜி.பி.செந்தில் குமரன், ஆர்.சக்திவேல் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.